RTROP.No.304/2022 - 23.09.2024

CW1 – தேவராஜன்

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலம் எங்கே உள்ளது என்றால் எடப்பாடி தாலுகா எருமப்பட்டி கிராமத்தில் உள்ளது. ஓமலூரிலிருந்து சங்ககிரி திருச்செங்கோடு வழியாக பரமத்தி வரை செல்லும் மாநில நெடுஞ் சாலைக்காக ஆர்ஜிதம் செய்யப்பட்டது என்றால் சரி. எங்கள் நிலம் ரோடு ஓரமாக இருந்ததா என்றால் எனது நிலம் ஓமலூர்–சங்ககிரி ரோட்டில் இருந்தது. 4 வழி சாலைக்காக அது ஆர்ஜிதம் செய்யப்பட்டது. அந்த இடத்தில் எனக்கு இரண்டரை ஏக்கர் நிலம் உள்ளது. மேற்படி நிலம் என் பெயரில் இருந்தது என்பதற்கான கிரயப்பத்திரம் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி சொத்து என்னுடைய அப்பாவின் பூர்வீக சொத்து ஆகும். என் அப்பாவிற்கு விவசாயம் தான் தொழில் என்றால் சரி. என்னுடன் பிறந்தவர்கள் ஒரு சகோதரர் மற்றும் ஒரு சகோதரி. எனக்கும் எனது சகோதரருக்கும் விவசாயம்தான் தொழில். என் அப்பா பூர்வீக சொத்தை சர்வே எண்.174/2பி1, 174/2பி2 ஆகிய புல எண்களில் உள்ள நிலத்தை பாககரார் மூலம் கொடுத்தார். அந்த சர்வே எண்.174/2பி1 நிலத்தில் 2 ஏக்கர் 20 செண்ட் நிலம் விவசாய நிலமாக

இருந்தது என்றால் சரி. சர்வே எண்.174/2பி2 நிலம் 10 செண்ட் பாககரார் பத்திரம் Ex.C7 ஆவணத்தின் மூலம் எனக்கு பாத்தியப்பட்டது. மேற்படி நிலம் ஆர்ஜிதம் செய்யப்படும் முன்னர் வரை விவசாயத்திற்குதான் பயன்படுத்தி வந்தேன் என்றால் சரியல்ல. நான் ஆர்ஜிதம் செய்த நிலத்தில் விவசாயம் செய்து வந்தேன். என்னுடைய நிலத்தில் சர்வே எண்.174/2பி1–வில் 686 சதுர மீட்டர் சர்வே எண்.174/2பி2–ல் 66 சதுர மீட்டரும் ஆர்ஜிதம் செய்யப்பட்டது என்றால் சரி. இந்த நிலத்தில் ரோடு ஓரமாக நீள வாக்கில் ஆர்ஜிதம் செய்தார்கள் என்றால் சரி. 25 அடி அகலத்திற்கு நீள வாக்கில் ஆர்ஜிதம் செய்யப்பட்டது. அதில் கட்டிடங்கள் ஏதும் இல்லை என்றால் சரியல்ல. சிமெண்ட் அட்டையால் வேயப்பட்ட பெட்டி கடை முழுவதும் ஆர்ஜிதம் செய்யப்பட்டுவிட்டது. அந்த கடை இரும்பினால் செய்யப்பட்டது. நகர்த்தக்கூடிய கடைதான் என்றால் சரியல்ல. அது சுவரினால் கட்டப்பட்ட கடை. அதற்கான இழப்பீட்டு தொகையும் நிலத்திற்கான இழப்பீட்டு தொகையும் நான் பெற்றுக்கொண்டேன் என்றால் குறைவாக இழப்பீடு கொடுத்தார்கள். இன்றுவரை விவசாய நிலமாகதான் பயன்படுத்தி வருகிறேன் என்றால் சரி.

தற்போது அமைக்கப்பட்ட புதிய 4 வழி சாலையிலிருந்து என்னுடைய நிலத்திற்கு நேரயடியாக செல்ல முடியும் என்றால் சரி. ரோடு அமைக்கப்பட்டதால் என்னுடைய நிலத்தின் மதிப்பீடு அதிகமாகி

உள்ளது என்றால் இல்லை. நிலத்திற்கு மதிப்பீடு அதிகமாக கொடுக்க வேண்டும் என்பதற்காக பக்கத்தில் உள்ள நிலங்களின் மதிப்பீட்டை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ளேன். நான் எந்தவித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றும் தாக்கல் செய்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சர்வே எண்.171/4 பி நிலத்திற்கு நான் அதிகமாக இழப்பீடு வழங்கி உள்ளதாக ஆவணம் தாக்கல் செய்துள்ளதாக நான் கூறுவது தவறு என்றால் சரியல்ல. சர்வே எண்.171/4 பி நிலத்தின் பத்திர ஆவணங்களை தாக்கல் செய்தால்தான் அந்த நிலத்தின் வகைப்பாடு, விஸ்தீர்ணம் பற்றி தெரிய வரும் என்றால் சரியல்ல. அந்த நிலத்தை அவர்கள் எவ்வாறு பயன்படுத்தி வந்தார்கள் என்று நான் ஆவணம் தாக்கல் செய்யாத நிலையில் அந்த நிலத்தின் மதிப்பை ஒப்பீடாக நான் கூற முடியாது என்றால் சரியல்ல. அருகில் உள்ள நிலங்கள் சதுரடி விலை மதிப்பில் உள்ளதாகவும், விலை அதிகமான மதிப்பீடு உள்ளதாகவும் எந்தவித ஆவணமும் தாக்கல் செய்யாமல் கோர முடியாது என்றால் சரியல்ல. ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலம் ஆர்ஜித சமயத்தில் இருந்த மதிப்பீட்டை கணக்கிட்டும், அருகில் உள்ள மற்ற நிலங்களின் மதிப்பீட்டை கணக்கிட்டும் சரியான முறையில் இழப்பீடு நிர்ணயிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

என்னுடைய நிலத்திற்கு அருகில் 1600 மீட்டர் நீள வாக்கில் உள்ள மற்ற நிலங்களின் விலை மதிப்பை கணக்கில் எடுத்துக்கொண்டு நிலத்தின் மதிப்பை நிர்ணயித்துள்ளார்கள் என்றும் எனவே நிலத்தின் மதிப்பை அதிகரிக்க அவசியம் இல்லை என்றால் சரியல்ல. நான் ஆதாரம் இல்லாமல் தாக்கல் செய்துள்ள மனு தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,
Principal District Judge, Salem.